







# என்ஜடியில் கொரோனா தடுப்பூசி முகாம்



► திருவெறும்பூர் அருகே என்ஜடி கல்லூரியில் நடந்த கொரோனா தடுப்பூசி முகாமை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

## அமைச்சர் அன்பில் மகேஷ் துவக்கி வைத்தார்

**திருவெறும்பூர், ஜூன் 5:** திருவெறும்பூர் அருகே என் ஐடி கல்லூரியில் கொரோனா தடுப்பூசி முகாமை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் என் ஐடி கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அவர்களது குடும்பத்தினர் என 100 பேர் நேற்று கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இதில் முன்னாள் எம்எல்ஏ சேகரன், துவாக்குடி நகர செயலாளர் காயாம்பு, திருவெறும்பூர் ஊராட்சி மன்ற கூட்டமைப்பு தலைவர் அழகு செந்தில் உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக திருவெறும்பூர் எம்எல்ஏ அலுவலகத்தில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு 350 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது காது கேளாதோர் கூட்டமைப்பு சார்பில் காது கேட்காத மற்றும் வாய் பேச முடியாத பள்ளிகளில் பொது அறிவு பாடத்தை கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர்.



INSTITUTE DAY
2020







I have taken the
COVID Vaccine
#Unite2fightCorona


INSTITUTE DAY







